செ.வெ.எண்: 32 / செப்டம்பர் /2019

நாள்: 11.09.2019

**திருச்சிராப்பள்ளி பூம்புகார் விற்பனை நிலையத்தில் நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு கொலு கண்காட்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.9.2019) தொடங்கி வைத்தார்.**

----------

திருச்சிராப்பள்ளி பூம்புகார் விற்பனை நிலையத்தில் நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு கொலு கண்காட்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.09.2019) தொடங்கி வைத்தார்.

சிறப்பு கொலு கண்காட்சியினை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகத்தின், பூம்புகார் விற்பனை நிலையம் திருச்சி சிங்காரதோப்பில் மாநகர மக்களின் பேராதரவோடு 45 வருடங்களை வெற்றிகரமாக கடந்து 46வது வருடத்தில் அடியெடுத்து வைக்கிறது. வழக்கம் போல் இவ்வாண்டும் வருகின்ற நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு இன்று (11.09.2019) முதல் 12.10.2019 வரை (ஞாயிறு கிழமை உட்பட) கொலு கண்காட்சி நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியின் சிறப்பு அம்சமாக பலவித கொலு பொம்மைகள், கொலு செட்டுகள், கொண்டபள்ளி பொம்மைகள், மரப்பாச்சி பொம்மைகள், காகிதக்கூழ் பொம்மைகள், மண், பளிங்குக்கல், மாக்கல், நவரத்தின கற்களினாலான பொம்மைகள் குறைந்த பட்சமாக ரூபாய் 50 முதல் ரூபாய் 25,000ம் வரை இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

இக்கண்காட்சியில் அஷ்டதிக் பாலகர், கொலுபடி செட், நவகிரகம், வேத மூர்த்திகள்,அத்திவரதர், நவசக்தி, தெய்வானை திருமணம், வரதராஜ பெருமாள் செட், பார்த்தசாரதி செட், ப்ரித்தியங்கராதேவி, விலங்குகள் செட், சப்த மதா செட், நவகிரக செட், திருப்பதி ப்ரமோத், வளைகாப்பு, வரவேற்ப, கிருஷ்ணலீலா, லவகுசா, நவதுர்கா வாகனம், கிராமிய விளையாட்டுகள், வேத மூர்த்திகள், கார்த்திகை தீபம், கள்ளழகர், கல்யாண ஊர்வலம், கிரிக்கெட், சஞ்சீவி, பெருமாள் ஊர்வலம், நவ கன்னிகள், பானைகிருஷ்ணன், தசாவதாரம், அஷ்டலெட்சுமி, கயிலாய மலை, கார்த்திகை பெண்கள், ஸ்ரீரங்கம், அன்னபூரணி, விநாயகர், மகாலெட்சுமி வரம், மாயா பஜார், சீனிவாச கல்யாணம், மீனாட்சி கல்யாணம், மும்மூர்த்தி, ராமர் பட்டாபிஷேகம், தாத்தா பாட்டி, பெருமாள் தாயார், ராமர் பாலம், சுக்ரீவர் பட்டாபிஷேகம், கனகதாரா, முருகர் உபதேசம், கஜேந்திர மோட்ஷம், மாங்கனி, கீதா உபதேசம், ஜோதிர்லிங்கம், பரத நாட்டியம், அசோகவனம், பீஷ்மா அம்பு படுக்கை, கனையாழி, ஆழ்வார், கோபியர் டான்ஸ், விவசாயம், தட்டாங்கி, ஜடாயு மோட்சம், ராமர், அகலியா சாப விமோட்சம், போன்ற பல்வேறு பொம்மை செட்கள், எண்ணற்ற தனி பொம்மைகளும் பலவிதமான மாடல்களில் வண்ணங்களில் இடம் பெற்றுள்ளன.

சென்ற ஆண்டு கொலுக் கண்காட்சியில் ரூபாய் 16 இலட்சம் மதிப்பில் விற்பனை நடைபெற்றுள்ளது. இந்த ஆண்டு ரூபாய் 20 இலட்சம் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கண்காட்சியில் காட்சிக்கும், விற்பனைக்கும் உள்ள பல்வேறு மாநிலங்களிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள அழகிய கொலு பொம்மைகளை பொதுமக்கள் வாங்கி தங்கள் இல்லத்திற்கு அழகூட்டி, வரும் நவராத்திரி பண்டிகையை சிறப்பாக கொண்டாடி மகிழ கேட்டுக் கொள்கிறேன். ஊரக மற்றும் நகர்புறத்தில் உள்ள நலிவடைந்த கலைஞர்களால் தயாரிக்கப்பட்ட கலைப் பொருட்கள் தமிழ்நாட்டில் 10 இடங்களில் பூம்புகார் மூலம் கலைத் தொழிலாளர்கள் அழகாக உற்பத்தி செய்வதை விற்பனை செய்து கொடுக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர் திருமதி.ஆர்.கங்காதேவி மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**